# வள்ளலாரின் விண்ணப்பங்கள் - ஒரு பார்வை

(மு. முத்துஜோதி)

வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் 150 ஆண்டுகளுக்கு முன்னால் 'வாழ்ந்த' அருளாளர்; சித்தர் மரபில் வந்த ஒரு அருள் ஞானி. தன் உடலை ஒளி உடலாக மாற்றி உடலுக்கு நேரும் மரணத்தை வென்றவர். எனவே, அவரை 'வாழ்ந்த' வள்ளலார் என்று குறியாமல் 'வாழ்கின்ற' வள்ளலார் என்றே குறிக்கப்படுகிறார். அவர்பெற்ற இந்தப் பெருவாழ்வு பற்றி அவர்தம் பலநூறு பாடல்களே சான்று பகர்கின்றன. கண்களுக்குப் புலப்படாமல் கைகளுக்கும் அகப்படாமல் இருக்கும் ஞான உடலில் தற்போது நம்மோடு இருக்கிறார்; வாழ்கிறார்.

நம் கண்களுக்குப் புலப்படும் உடலோடு நம்மோடு இந்நில உலகில் பெருமான் 51 ஆண்டுகள் இருந்தார்கள். அப்போது அவர்கள் தம் ஞான அனுபவங்களை அருள் அனுபவப் பாடல்களாகவும், உரை நடையாகவும் வெளிப்படுத்தினார்கள். இவையாவும் நம் நல்லூல் பயணால் 'திரு அருட்பா' என்னும் தொகுப்பாக – ஞானப் பெட்டகமாக – கரும்புக் கருவூலமாகக் கிடைத்திருக்கின்றன. அவ்வாறு கிடைத்த உரைநடைப் பகுதிகளில் “விண்ணப்பங்கள்” என்ற ஒரு பகுதியைப்பற்றி சிந்திப்பதே இம்முயற்சியின் நோக்கமாகும்.

வெள்ளையர் வாழ்ந்த காலத்தில் பெருமான் வாழ்ந்ததாலோ என்னவோ தம் அனுபவ வெளிப்பாடுகளை, இன்றைய நிர்வாக இயலுக்கு ஏற்ப முறையாக வெளியிட்டார்கள். எடுத்துக்காட்டாக,

1. தம் கொள்கைகளை விளக்க ஒரு சங்கம் (Association) கண்டது;

2. தம் கொள்கைகளை விளக்க சுத்த சன்மார்க்க விளக்கம் (Proclamation of Memorundum) சொன்னது;

3. சன்மார்க்கத்தில் வளர வழிமுறைகளாக இந்திர்ய கரண ஒழுக்கங்கள் (Regulation and Guidelines) வலியுறுத்தியது;

4. தம் சங்கத்திற்கென ஒரு கொடி (Flag) கட்டியது;

5. சன்மார்க்கிகளுக்கு கட்டளைகள் (MIS – Management Information System of Circulars) இட்டது;

6. சன்மார்க்கிகள் பழகும் முறை – 'சிறு விண்ணப்பம்' (Guidelines) வெளியிட்டது;

7. தன் அனுபவங்களின் முறையான பதிவுகளை செய்தது; (Recording / Documenting or Registering of self attainments)

8. முறையான கடிதப் போக்கு வரத்து (Communicatiuon);

இந்தப் பின்னணியில் பெருமானின் விண்ணப்பங்களைப் பற்றிச் சிந்திப்பது சாலும். குறிப்பாக "சிறு விண்ணப்பம்" ஒன்றைப் பற்றியே ஆழமாகச் சிந்திப்பது இந்நூலின் கருப்பொருளாகக் கொள்ளப்படுகிறது.

**விண்ணப்பங்களை சிந்திக்கும்போது இரு கருத்துக்களை மனதில் வாங்கவேண்டும்.**

1. முதல் விண்ணப்பமாகிய சிறு விண்ணப்பம் ஒன்றுதான் கூட்டுப் பிரார்த்தனைக்காக எழுதப்பெற்றது.

2. ஏனைய மூன்றும் தம் தனி அனுபவத்தை பெருமான் பதிவு செய்து கொள்வது என்பது.

**விண்ணப்பப் பகுதியில் நான்கு விண்ணப்பங்கள் இருக்கின்றன. அவையாவன:**

1. சுத்த சன்மார்க்க சத்திய 'சிறு விண்ணப்பம்'.
2. சுத்த சன்மார்க்க சத்தியப் 'பெரு விண்ணப்பம்'.
3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய 'ஞான விண்ணப்பம்'.
4. சுமரச சுத்த சன்மார்க்க சங்க 'சத்திய விண்ணப்பம்'.

**1. சிறு விண்ணப்பம்**

முதலாவதாக வரும் 'சிறு விண்ணப்பம்' பற்றி விரிவாக சிந்திக்க இருப்பதால், மற்ற மூன்று விண்ணப்பங்கள் பற்றி சுருக்கமாக பின்வருமாறு சிந்திக்கலாம்:

எளிமையாக சிந்திப்பதற்காக, விண்ணப்பங்களின் பெயர்களை முழுவதுமாக திரும்ப திரும்ப குறிப்பதற்குப் பதிலாக அவைகளை முறையே சிறு விண்ணப்பம், பெரு விண்ணப்பம், ஞான விண்ணப்பம், சத்திய விண்ணப்பம் என்ற இறுதி சொற்களால் மட்டுமே ஈண்டு குறிப்பிடப்படுகின்றன.

**2. பெரு விண்ணப்பம்**

இது முழுக்க முழுக்க வள்ளற்பெருமான் தன்னை முன்னிலைப்படுத்தி இறைவனுக்கு எழுதிய விண்ணப்பம். வள்ளலார் தான் பிறப்பெடுத்த சிற்றணுப்பசு எனும் அணுநிலையிலிருந்து தந்தை சுக்கிலம் மூலமாக தாய் கருப்பையில் புகுந்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நிலை வளர்ந்து உடலாக (பிண்டமாக) வெளிவந்து சிசு குமார வாலிப வயோதிக பருவம் வரையிலான பல அனுபவங்களை வெளிப்படுத்துவது.

இப்பகுதி கூட்டு வழிபாட்டிற்குச் சொன்னது அல்ல. இதில் 'யான்' 'எனது' என 69 இடங்களில் தன்னை முன்னிலைப் படுத்துகிறார்கள். இது ஒன்றிற்கு மேற்பட்ட கூட்டு ஓதுதலுக்கு வழிபாட்டிற்கு வார்த்தது இல்லை.

"குமாரப் பருவத்தில் என்னை கல்வியிற் பயிற்றும் ஆசிரியரையின்றியே என்றறத்திற் பயின்றறிதற்கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுளகத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர்"

என்பன போன்ற சொற்கள் பெருமான் பெற்ற பேற்றை வெளிப்படுத்துவன. இந்நிலையைப் பெறாத நாம் இந்த விண்ணப்பத்தை கூட்டாக எவ்வாறு சொல்லுதல் பொறுந்தும்? இது பெருமானுக்கே பொறுந்தும். இவ்விண்ணப்பத்தின் மற்றப் பகுதிகளில்

வரும் உயிர்கள் தோன்றும் விதம் குணங்கள் கூடும் விதம் ஆகியன, தனி நபர் தனித்து இருந்து கண்ணீர் மல்க சிந்திக்கத்தக்கன.

### 3. ஞான விண்ணப்பம்

இது இறைவனது பெருமையை அறிவால் உணர்ந்து அவனை அடைதல் எத்துணை அரிது எனச்சொல்லி, தான் அறிய முயலுகிற திறத்தைப் பற்றி பெருமான் தன் அனுபவமாகச் சொன்னது - எழுதியது.

இதுவும் கூட்டு வழிபாட்டிற்காக அன்று – தனி மனிதன் தனக்குள்ளே நெகிழ விண்ணப்பிக்க வேண்டுவது ஆகும்.

இதில் பெருமான் தன்னை ‘யான்’ ‘எனது’ என 21 இடங்களில் வெளிப்படுத்துகிறார்கள்.

பெருமான் சுத்த சன்மார்க்க ஞானிகளை அடுத்து, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பற்றி விளக்கம் கேட்டபோது அவர்கள் வாய் பேசாது ஆனந்தக் கண்ணீர் வடித்து நின்ற கோலம்பற்றி தன் அனுபவத்தைக் கூறுகிறார்கள். எனவே இது கூட்டு வழிபாட்டிற்கு அல்ல, தனிமனிதன் படித்து படித்து கண்ணீர் கரைய வந்த விண்ணப்பம் என்றுணர வேண்டும்.

### 4. சத்திய விண்ணப்பம்

இதில் வள்ளலார் தான் தன் எல்லா சுதந்திரங்களையும் இறைவனுக்கு அளித்துவிட்டது பற்றியும், தனக்கு மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலியவை நீங்கி நித்திய வாழ்வை அருள வேண்டுவது பற்றியும் குறிக்கிறார்கள்.

இந்த விண்ணப்பம் தான் விண்ணப்ப பகுதியிலேயே அளவால் மிகசிறியது. இதில் பெருமான் ‘யான்’ ‘எனது’ என 12 இடங்களில் தன்னை வெளிப்படுத்துகிறார்கள். இதில் ‘‘சுதந்திரம் அனைத்தையும் இறைவனுக்கு கொடுத்து விட்டேன்’’ என்ற இறந்தகால செய்தியாக தெரிவிக்கிறார்கள்.

இதுவும் கூட்டு மொழிதலுக்கு எழுதியது அல்ல என்பது இதனால் பெறப்படுகிறது. ஒரு சுதந்திரத்தையும் நீக்காத நாம் தனிப்பட்ட முறையில் இதை ஓதி தேக சுதந்திரம், போக சுதந்திரம், ஜீவ சுதந்திரம் என்னும் மூவகைச் சுதந்திரங்களையும் இறைவனுக்கு அளிக்க அதிதீவிர விருப்ப முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

ஆக இந்த மூன்று விண்ணப்பங்களும் கூட்டு மொழிதலுக்கு அல்லது கூட்டு வழிபாட்டிற்கு அல்ல - இவையாவும் பெருமானின் தன் ஞான அனுபவமாக சொன்னது என்பதை உணர்ந்து, ஒவ்வொரு தனி மனிதனும் தனித்து இவைகளை வாசித்து மேனிலை அடைய கண்ணீர் கரைய வேண்டும்.

அவ்வாறாயின், கூட்டு மொழிதலுக்கு – வழிபாட்டிற்கு பெருமான் அருளியது எது? முதலாவதாக வரும் சிறுவிண்ணப்பம் என்ற விண்ணப்பம்தான் நம்மனோர்கள் கூட்டாக மொழிந்து – பொருள் உணர்ந்துச் சொல்லி சன்மார்க்க நெறி சென்றடைய வழி வகையாகச் சொன்னது என்பதை ஆழ்ந்து அறிதல் வேண்டும். சிறு விண்ணப்பம் கூட்டு மொழிதலுக்காகச் சொன்னது என்பதை வெளிப்படுத்தவே, மற்ற மூன்று

விண்ணப்பங்களில் ‘யான்’ ‘எனது’ என்ற தன்னிலை சொற்களை கூறிய வள்ளலார், சிறு விண்ணப்பத்தில் மாத்திரம் தான் ‘யாங்கள்’ ‘எங்களது’ என்ற படற்கைச் சொற்களை 36 இடங்களில் குறிக்கின்றார்கள்.

இனி, ‘சிறு விண்ணப்பத்தை’ சற்று விரிவாகச் சிந்திப்போம்.

**சிறு விண்ணப்பம்: ஓட்டுமொத்தச் செய்தி:**

சிறு விண்ணப்பத்தில் பெருமான் இரண்டு செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றார்கள்.

1. இறைவன் ஆணைப்படி வடலூர் ஞானசபையை அமைத்தல்

எழுவகை பிறப்புகளில் அழியாப் பெருவாழ்வை அடையத்தக்க மனிதப்பிறப்பு கிடைக்கப்பெற்றபின், இம்மனிதப் பிறப்பில் இறைவன் திருவருளை அடியார்கள் பெரும் பொருட்டு, இறைவன் குறிப்பிற்கு இணங்க ஞான சபையை வள்ளலார் அமைத்து தந்தார் என்பது முதல் செய்தி.

2. கூட்டு வழிபாட்டிற்கு தடை எது, இலக்கு எது என அறிவுறுத்துவது வழிபாட்டிற்கு ஞான சபையை அமைத்த பின்னால் சன்மார்க்கிகள் கூட்டாக இறைவழிபாட்டைச் செய்ய எது தடை அதனை நீக்க எது இலக்கு என்று சொல்வது இரண்டாவது செய்தி.

இனி, சிறு விண்ணப்பத்தை முழுமையாக ஒருமுறை படிப்போம்.

**திருச்சிற்றம்பலம்**

**சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்.**

1. இயற்கை உண்மைய ரென்றும் இயற்கை அறிவி ரென்றும் இயற்கை யின்பின் ரென்றும் நிர்குண ரென்றும் சிற்குண ரென்றும் நித்திய ரென்றும் சத்திய ரென்றும் ஏக ரென்றும் அனேக ரென்றும் ஆதிய ரென்றும் அனாதிய ரென்றும் அமல ரென்றும் அருட்பெருஞ்ஜோதிய ரென்றும் அற்புத ரென்றும் நிரதிசய ரென்றும் எல்லா மாணவ ரென்றும் எல்லா முடையவ ரென்றும் எல்லா மல்லவ ரென்றுங் குறிக்கப்படுதன் முதலிய அளவு கடந்த திருக்குறிப்பத் திருவார்த்தைகளாற் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும் நினைத்தும் உணர்ந்தும் புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும் பதியாகிய பெருங்கருணைக் கடவுளே! தேவரீர் திருவருட் சமூகத்தில் துரும்பினுஞ் சிறியேமாகிய யாங்கள் சிற்றறிவாற் செய்து கொள்ளுஞ் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக் கேற்பித்தருளி யெங்களை யிரக்ஷித்தருளல் வேண்டும்.

2. எல்லாச் சத்திகளும் எல்லாச் சத்தர்களும் எல்லாத் தலைவர்களும் அறிந்து கொள்வதற்கு மிகவும் எளிதாய், எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத்துவிகளுக்கும் அப்பா லப்பாலாய் விளங்கும் ஓர் சுத்தஞான வெளியில் தமக்கு ஒரு விதத்தாலும் ஒப்புயர்வு சிறிதுங் குறிக்கப்படாத தனிப்பெருந் தலைமை யருட்பெருஞ்சோதியராகி விளங்குகின்ற தேவரீரது தனிப்பெருந் தன்மைக்கு மெய்யறிவுடையோரால் விதிக்கப்பட்ட வேதாசமங்களும் பெருந்தகை வாசகத்தைப் பெறாது சிறுதகை வாசகங்களைப் பெற்றுத் திகைப்படைகின்றன வென்றால், மலத்திற்

புழுத்த புழுவினுஞ் சிறியேமாகிய யாங்கள் திருச்சமூகத்தில் விண்ணப்பித்தற்குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வாறறிவோம்! எங்ஙனஞ் செய்வோம்! ஆகலில் கருணாநிதியாகிய கடவுளே! யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி யெங்களைக் காத்தருளல் வேண்டும்.

3. தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞானவிருளில் அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணையாற் பவுதிக வுடம்பிற் சிறிதறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்று தொட் டிஞ்ஞான்றுவரையும், அது கொண்டு அறிவே வடிவாய் அறிவே யுருவாய், அறிவே பொறியாய், அனுபவிக்கத் தெரிந்துகொள்ளாது, குற்றமே வடிவாய்க், குற்றமே யுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே மனமாய்க், குற்றமே யறிவாய்க், குற்றமே யனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமூகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய்க் குற்றமே குறிக்குமென்றறிந்தோ மாயினும், குற்றங் குறியாத வகை விண்ணப்பஞ் செய்தற்கு ஒருவாற்றானு முணர்ச்சியில்லோ மாதலிற்றுணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக்கியற்கையாதலின் இவ் விண்ணப்பங்களிற் குற்றங் குறியாது கடை கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

4. அஞ்ஞான விருளில் ஒன்றும் தெரியா துணர்ச்சியின்றிக்கிடந்த காலம்போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே, இவ்வுலகினிடத்து புல், நெல், மரஞ், செடி, பூடு முதலியவாகவும் கல், மலை, குன்று முதலியாகவும் பிறந்து பிறந்து, களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளுண்டல், உலர்ப்புண்டல், உடைப்புண்டல், வெடிப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத்தாவர யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம்; பின்னர் எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியாகவும் தவளை, சிறுமீன், முதலை, சுறா, திமிங்கல முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல், நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்வூர்வன நீர் வாழ்வன யோனிவர்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்;

பின்னர் ஈ, வண்டு தும்பி, குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியாகப் பிறந்து பிறந்து அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல், உலைப் புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந் திறந்து அப் பறவையோனிவர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்; பின்னர் அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு, யானை, குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல் அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்திறந்து அவ்விலங்கு யோனி வர்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்; பின்னர் பாசாசர், பூதர், இராக்கதர், அசுரர், சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல், அகப்படுதல், அகங்கரித்தல், அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல், திகைப்புறுதல், போரிடுதல், கொலைப்படுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத் தேவ யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்; பின்னர் காட்டகத்தார், காவுசெய்வோர், கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து பயப்படல், சிறைப்படல், சிதைபடல்

முதலிய அவத்தைகளால் இறந்திறந்து அந் நரகயோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்.

5. அங்ஙனம் யாங்கள் அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் களைப்பும் துன்பமுந் திருவுளத் தடைந்து இரங்கியருளி அழியாப்பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம் மனித தேசத்திற் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன்றுந் தெரிந்தோ மில்லை.

(இன்னும் வளரும்...)